போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்



OFFICE OF THE ... OF BOOKS
18 JAN 1943
MADRAS

89
JL
ᵒ211, N11 P8
N43:33·7
189983

E... Lourduswami, B.A., L.T.
...raining School, Trichinopoly.

... 15 ஜனவரி 1943 மலர் 7

R. C. போதனாமுறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 1½

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	145
2.	சென்னை கல்வி இலாகா அறிக்கை	146
3.	அணியியல்	146
4.	வகுப்பில் பொதுவாகக் காணப்படும் சில ஒழுங்கீனங்களும் அவைகளைத் தவிர்க்கும் வழிகளும் ...	147
5.	தொழில் முறையின் மூலம் கணித போதனை ...	148
6.	யோசனைக் கணக்கு விடை	150
7.	பாடக் குறிப்பு	151
8.	சிறு கதை	152
9.	யோசனைக் கணக்கு	153
10.	விகடம்	153
11.	இயற்கை அறிவு	154
12.	"ஆசைக்கிளி"	155
13.	உடை	160
14.	விடுகவி விடை	161
15.	இது என்ன?	161
16.	மழை வருகையைக் குறிக்கும் அடையாளங்கள் ...	162
17.	உங்களுக்குத் தெரியுமா?	163
18.	பெற்றோர் சங்கங்கள்	164
19.	புதுவருட வாழ்த்துப்பா	165

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Imprimatur: ✠ JAMES, *Bishop of Trichinopoly.*



OFFICE OF ... REGISTRAR OF BOOKS
18 JAN 1943
MADRAS

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 33] 15 ஜனவரி 1943 [மலர் 7

பத்திராதிபர் குறிப்புகள்

189983

We wish all our Subscribers and well wishers a Most Happy and Prosperous New Year.

நமது அன்பார்ந்த சந்தாதாரர்களுக்கும் ஏனைய பூங்கொத்து நேயர்களுக்கும் எமது மனமுவந்த புது வாழ்த்துகள் உரித்தாகுக.

நம் பூங்கொத்தைப் பாங்குடன் படித்துப் பயன் எய்தி வருபவர்க்கும், இதனை அன்புடன் ஆதரித்து சந்தாதாரர்களை அதிகமாக்கி வருபவர்க்கும் எமது நன்றி என்றும் உரிமையாகும்.

காகிதப் பஞ்சம் கேட்டிராதபடி வாட்டிவரும் இக்காலத்திலும் நம் "பூங்கொத்தின்" விஷயம் சற்றேனும் குன்றாமல் எப்போதும்போல் விளங்கி வருவதை நம் நேயர்கள் அறிவார்கள்.

எனவே நமது அபிமானிகள் அனைவரும் இவ்விஷயத்தை நன்குணர்ந்தும் நம் "பூங்கொத்தை" நன்கு மதித்தும், விஷய தானம் அதிகமதிகமாகப் புரிந்தும், அவரவர்கள் செலுத்தவேண்டிய சந்தாக்களை ஒழுங்காகச் செலுத்தியும், புதுச் சந்தாதார்களைச் சேர்த்தும் நம் "பூங்கொத்தை" மகிமைப்படுத்துவார்களாக.

மற்றொருமுறை நம் சந்தாதாரர்கள் எல்லாருக்கும் எம் நன்றியையும் வாழ்த்துதலையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனது திருவருள் அனைவர்க்கும் சித்திக்கும்படி வேண்டிக்கொள்ளுகின்றனம்.

"சென்னை கல்வி இலாகா அறிக்கை"

VIII-வது வகுப்பு முடிவு ஸர்க்கார் பரீட்சை— தமிழ்ப்பாட மார்க்கு

ஷை பரீட்சை தமிழ் பாடத்துக்கு (First Language) ஏற்பட்டுள்ள 100 மார்க்கில், பாடவிஷயம் இலக்கணம் இவற்றிற்கு 80 மார்க்கும், பொதுவியாசம் எழுதுவதற்கு 20 மார்க்கும், ஆகமொத்தம் 100 மார்க்கு அளிக்கப்படுமென, கல்வி இலாகா கல்வி அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். ஆகவே, பாடவிஷயம் இலக்கணம் இதோடு பொது வியாஸமும் ஷை தமிழ் பரீட்சையில் எழுதவேண்டி வருமென்பதை அறியவும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக

அணியியல்

சிலேடையணி

ஒருமொழியாவது தொடர்மொழியாவது இயற்சொல் திரிசொற்களால் அமைவுப்பெற்று சரளமான நடையுடைத்தாய்ப் பல பொருளைத் தருமாறு நிறுவப்படுதலே சிலேடையென்னும் அணியாகும். உ-ம். :—

நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே - தாணுவே
சீராரூர்மேவுஞ் சிவனேசிரிப்பன்றே
நேரார்புரமெரித்த நேர்

எனவரும் இரட்டையர் செய்யுளுள் நஞ்சிருக்கும் என்ற தொடருக்கு விடமிருக்கும் எனவும், தேய்ந்திருக்கும் எனவும், 'மண்டின்ற பாணம்' என்பதற்கு 'மண்ணையுண்ட' எனவும், 'மண்ணால் உண்ணப்பட்ட' எனவும், 'சிரிப்பென்பதற்கு இகழ்வு நகைப்பு' எனவும் இருபொருள் தோன்றுதல் காண்க. இச்செய்யுளின் பொருள் :—

திரிபுராதிகளை வெல்லுவதற்குச் சிவபெருமான் கைக்கொண்ட ஆயுதங்களுள் வில்லோகல்வில். அதை வளைக்கக்கொண்ட கயிறோ தேய்ந்து நைந்தது. அவ்வில்லிற்பூட்டி விடுத்தற்குக் கொண்ட பாணமோ மண்ணுண்டு துருப்பிடித்தது. இத்தகைய ஆயுதங்களைத் துணையாகக்கொண்டு பகைவரை அழிப்பேனென்று தொடங்கியது கேட்டார் நகைத்திழித்துரைக்கு தகையதன்றோ என்பது மற்றோர் பொருள். வில்லோ உறுதிவாய்ந்த கல்வில், கயிறோ நஞ்சைக் கக்கி உலகையும் அழிக்க வல்ல ஆதிசேடன் என்னும் பாம்பு. பாணமே உலகமுண்டபெருவயறுடைய மகாவிஷ்ணு. இத்தகைய உயர்ந்த ஆயுதங்களிருப்பவும் அவர்களை அழித்தது சிவபெருமானது சிரிப்பேயாகும் என்பது. இவ்வாறே பிறவற்றினுங் கொள்க.

M. A. S. Udaiyar.

வகுப்பில் பொதுவாகக் காணப்படும் சில ஒழுங்கீனங்களும் அவைகளைத் தவிர்க்கும் வழிகளும்

(P. G. S. Aiyar, B.A., L.T.)

கவனக்குறைவு :—ஆசிரியர் உற்சாகமுடையவராக விருக்கலாம்; பாடத்தையும் விசேஷ கவனத்துடனும் பிரயாசையுடனும் தயாரித்திருக்கலாம். ஆனால் இவைகளால் பயன் யாதொன்றும் ஏற்படாமல் போய்விடும். இதற்குக்காரணம் மாணவரின் கவனக்குறைவேயாகும்.

மாணவர் வகுப்பு அறையில் வந்து அமர்வதில் தகராறுகள் ஏற்படும். சில மாணவர் சண்டையிடுவர். சிலர் உட்காருவதற்கு இடமில்லாமல் நின்றுகொண்டிருப்பார்கள். பாடத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட நேரத்தில் சில நிமிஷங்கள் இத்தகைய ஆர்ப்பாட்டங்களில் கழிந்துவிடலாம். பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்பொழுது மாத்திரமல்லாமல் ஒவ்வொரு தடவை வேறு வகுப்பறைகளுக்குப் போய்விட்டு வரும்பொழுதும் இவ்வித இடஞ்சல்கள் காணப்படும். இதனைத் தவிர்ப்பதற்கு மாணவர் வரிசைக்கிரமமாக வகுப்பறையைவிட்டுப் போவதற்கும் வருவதற்கும் பழக்கப்படுத்தவேண்டும். பாடசாலை ஆரம்பிக்குமுன் மாணவர் யாவரும் பொது ஸ்தலத்தில் பிரார்த்தனை நடத்தித் தங்கள் வகுப்பறைக்குச் செல்லும்படி செய்தால் இக்குறை பெரிதும் தவிர்க்கப்படும். தவிரவும் வகுப்பறைகள் நெருக்கமாகவுள்ள பாடசாலையில் அடுத்த வகுப்பின் சப்தம் மற்றொரு வகுப்பு போதனையைத் தடங்கல் செய்யாதிருப்பதற்கும் இவ்வுபாயம் சிறந்த சாதனமாகும்.

சில வகுப்புகளில் மாணவர் ஆசிரியரின் போதனையைக் கவனிக்காமலிருக்கலாம். இக்குறை ஆசிரியரின் உற்சாகத்தைப் பாதிப்பதுடன் பொறுமையையும் இழக்கச்செய்யலாம். ஆதலால் கவனக்குறைவின் காரணத்தைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் அவசியம். நாம் கரும்பலகையில் எழுதும் அல்லது வரையும் விஷயம் எல்லா மாணவருக்குந் தெரியக்கூடியதாவென்பதை நிர்ணயிக்கவேண்டும். ஆசிரியர் கூறும் வார்த்தைகள் எல்லா மாணவர் காதிலும் தெளிவாய்ப் படவேண்டும். காது மந்தமுடைய சிறுவர்களையும், திருஷ்டிக் கோளாறு உடையவர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களுடைய பெற்றோருக்குத் தெரிவித்து வைத்தியம் செய்யும்படி வற்புறுத்தலாம்.

கவனக்குறைவின் காரணம் தனது போதனையாகவுமிருக்கலாம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பல புலன்களுக்கும் உணர்ச்சியளிக்கக்கூடிய விதத்தில் நமது போதனை அமையவேண்டும். களைப்பின் காரணமாகவும் கவனக்குறைவு ஏற்படலாம். இதற்கு காலத்திட்டத்தை (Time-table) சீர்படுத்துதல் அவசியம். ஆசிரியர்கள் ஆழ்ந்து சிந்தனை செய்யின் பல வழிகள் புலப்படும்.

தொழில் முறையின் மூலம் கணித போதனை

(A. S. Ignatius)

தொழில் முறை என்றால் ஓர் குறிப்பிட்ட தொழிலைத் தெரிந்து கொண்டு அத்தொழிலை நாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் சமயங்களில் அத்தொழிலில் உண்டாகும் வசதிகளைப் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வி அறிவை உண்டுபண்ணப் பயன்படுத்திக்கொள்வதாகும்.

உதாரணமாக: இதை நூல் நூற்றல், நெய்தல்போன்ற தொழில்களின் மூலம் எப்படிக் கணிதம் கற்பிக்கலாம் என்பதைச் சிறிது பார்ப்போம்.

நூல் நூற்றல் முக்கியமாக 2, 3 வகுப்புகளுக்கு ஏற்றது. இவ் வகுப்புகளில் நூற்றலைக்கொண்டே கணித பாடத்தைக் கற்பிக்கலாம். 4, 5 வகுப்புகளில் நூற்றல் தொழிலோடு நெசவுத்தொழிலும் சேர்க்கப்படும். இத்தொழில் கணித பாடத்தின் எல்லா அம்சங்களையும் கற்பிக்கத் தகுந்த வேலைகளைக்கொண்டுள்ளது. ஆயினும் சர்க்காரால் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி விஷயங்களை வரிசையாகக் கற்பிக்க முடியாது. தொழிலில் படிப்படியாக நடக்கும் வேலைகளை நன்கு அறிந்து அதற்கு ஏற்ற பாடத்திட்டம் ஒன்று அமைக்கவேண்டும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பாடத்திட்டதை அனுசரித்து கணித விஷயங்களை கற்பிக்கும் முறையை சற்று பார்க்கலாம்.

எண்மானம் எண் குறிப்பு:—எண்ணுவதில் பயிற்சி அளிக்க வேண்டுமாயின், சிறிய எண்களைப் போதிக்கும்போது பஞ்சுப்பட்டைகளை எண்ணுதல், நூல் நூற்பதற்கும், நூலைச் சுற்றுவதற்கும் துணைக் கருவிகளான, தக்ளிகள், ராட்டினங்கள், வீசனங்கள் இவைகளை எண்ணுதல்வேண்டும். வீசனத்தில் நூலைச் சுற்றும்போதும், தயாரித்த சிட்டங்களையும், கழிகளையும் எண்ணும்போதும், நெய்வதற்குத் தேவையான விழுதுகளை எண்ணிக் கோர்க்கும்போதும், எண்கள் கற்பிக்கப்படவேண்டும். இன்னும் நெய்யப்பட்ட துண்டுகள், வேஷ்டிகள், போர்வைகள், சமுக்காளங்கள் இவைகளைச் சுத்தஞ் செய்து, எண்ணி, மடித்துவைக்கச் சொல்லலாம்.

சிறுவருக்கு, தங்கள் பள்ளிக்கூடத்தில் நெய்யப்பட்ட துணி என்றால், அவைகளைத் தொடவும், எண்ணவும், மடிக்கவும், இன்னும் விலைக்கே வாங்கவும் அதிகம் விரும்புவர். ஆகவே, மேற்கண்டபடி எண் போதிக்கும் ஆசிரியர் ஆங்காங்கு எண் குறிப்பு அட்டைகளை உபயோகித்து, எண் குறிப்பைக் கற்பிக்கவேண்டும். எண் குறிப்பு சம்மந்தமான பயிற்சிகளுக்குத் தனி வகுப்புகளே சிறந்தது. தனி வகுப்புகளில் எண்மானங்கள் கற்பிக்கப்படும். மேல் வகுப்புகளில் (IV & V Standard) நம் நாட்டிலுள்ள பருத்தி சாகுபடி நிலங்கள், பருத்தி

ஏற்றுமதி இறக்குமதி, நெய்யுந்தொழிலாளர் இவைகளை சம்மந்தப் படுத்திப் பெரிய எண்களைப் போதிக்கலாம்.

குறிப்பு:—நூலை சிட்டம்போடவும், கழிகளையும், கட்டுகளையும் தயாரிக்கவும் வேண்டுமாயின் இதற்குமுன், பிள்ளைகள் 80 வரை இலக்கங்களை எண்ணவும் எழுதவும் தெரிந்திருக்கவேண்டும். ஏனெனில் 80 வரை எண்ணத் தெரிந்திருந்தால்தான் 80 சுற்றுக்கள் உள்ள அரட்டு ஒன்றைத் தயாரிக்க முடியும். பின்பு 7 அரட்டுகளை 1 சிட்டமாகவும், 10 சிட்டங்களை 1 கழியாகவும், நூலின் நம்பருக்கு ஏற்றபடி கட்டுகளாகவும் கட்டப்படும்.

நான்கு முக்கிய விதிகள்

கூட்டல்:—பஞ்சுப்பட்டைகள், தக்ளிகள், சிட்டங்கள், கழிகள் இவைகளையும், கண்டுக்குழல்கள், பாபின் டப்பாக்கள் இவைகளைக் குவியல்களாக எண்ணிவைப்பதாலும், ஒவ்வொருவரும் தயாரித்த சிட்டங்களையும், கழிகளையும், நூல் நூற்பதில் செலவு செய்த பஞ்சுப் பட்டைகளையும், பெரிய வகுப்பு மாணவர்களால் நெய்யப்பட்ட உருப்படிகளை மொத்தமாக எண்ணும்போதும், கூட்டல் கற்பிக்கலாம்— கூட்டல் பயிற்சிக்குத் தேவையான மூல எண் கூட்டல் சக்கரங்களையும், காட்டி மறைக்கும் அட்டைகளைக்கொண்டும் பயிற்சி அளிக்கலாம். இவைகளைத் தனி வகுப்புகளில் நடத்துவதால், ஒவ்வொரு மாணவரின் அறிவையும் சோதிப்பதாகும்.

கழித்தல்:—நூற்பதற்குக் கொடுக்கப்பட்ட பஞ்சுப்பட்டைகளில் நூற்ற பட்டைகள் நீங்கலாக மீதியானவற்றைக் கணக்கிடல். நூல் கட்டுகளிலிருந்து கழிகளையும், சிட்டங்களையும் பிரித்து எடுத்தல். நெய்யப்பட்ட மொத்த உருப்படிகளில் விற்பனையானவை போக மீதியை அறிதல். சிட்டங்களை வீசனத்தில் தயாரிக்கும்போது, 80 சுற்றுகளுக்கு இன்னும் தேவையான சுற்றுகளை அறிதல். பாவு தயாரிக்கும்போதும் பாவை வட்டில் சுற்றும்போதும், அச்சில் இழைகளைக் கோர்க்கும்போதும், பாவு நடு மையமாக அமையவேண்டுமாதலின், பாவின் இரண்டு ஓரங்களுக்கும் ஓடப்பெட்டிக்கும் இடையே சமதூரம் இருக்கும்படியாக அச்சு, வட்டு இவைகளின் நீளத்தில் பாவின் அகலத்தைக் கழிக்கவேண்டும்.

பெருக்கல்:—பட்டைகளை 2, 2 ஆகவும், 3, 3 ஆகவும், 4, 4 ஆகவும் சம அளவில் ஒவ்வொருவருக்கும் கொடுக்க எத்தனை பட்டைகள் தேவை. இப்படியே, ஒவ்வொருவராலும் ஒருநாளில் தயாரிக்கப்பட்ட பட்டைகள், சிட்டங்கள், கழிகள் இவைகளைக்கொண்டு, வகுப்பில் தயாரிக்கப்பட்டவைகளை அறிதல், இப்படியே 1 வாரம், 1 மாதம் இவைகளுக்கும் கணக்கிடலாம். பெருக்கல் சம்மந்தமாக கீழ்க்கண்ட வாய்ப்பாடு கற்பிக்கப்படவேண்டும்.

80 சுற்றுகள்	...	1 அரட்டு.
7 அரட்டுகள்	...	1 சிட்டம்.
10 சிட்டங்கள்	...	1 கழி.

குறிப்பு :—அரட்டின் சுற்றளவு $1\frac{1}{2}$ கெஜம். மேல்கண்ட வாய்ப்பாட்டிலிருந்து அரட்டு, சிட்டம், கழி இவைகளின் மொத்த நீளத்தை அறியலாம்.

வகுத்தல் :—தக்ளிகள், பட்டைகள், ராட்டினங்கள், பாபின்கள், கண்டுக்குழல்கள் அல்லது தார்குழல்கள் இவைகளை வகுப்பு மாணவர்களுக்குப் பிரித்துக்கொடுத்தல். (உ-ம்.) 45 பட்டைகளை 5 ஆக 9 பேருக்குக் கொடுக்கலாம் என்று அறிதல். சிட்டங்களைக் கழிகளாகக் கட்டுவதற்குமுன், 100 சிட்டங்களில் எத்தனை கழிகள் தயாரிக்கலாம் என்றும், மொத்த பாவின் நீளத்தைக்கொண்டும், செய்ய உத்தேசிக்கும் துண்டின் நீளத்தைக்கொண்டும் எத்தனை துண்டுகள் கிடைக்கும் என்பதை அறியலாம். ஒரு வாரம், ஒரு மாதம் இவைகளில் தயாரித்த பட்டைகள், கழிகள் இவைகளிலிருந்து, ஒவ்வொருநாளும் தயாரிக்கப் பட்டவைகளை அறிதல். மொத்த லாபம் அல்லது நஷ்டம் இவைகளிலிருந்தும் ஒவ்வொரு உருப்பிடிக்கும் லாப நஷ்டம் கணித்தல். இவை போன்ற வேலைகளைக்கொண்டு வகுத்தல் கற்பிக்கலாம்.

குறிப்பு :—நான்கு விதிகளையும் கற்பிக்கும்போது + − × ÷ போன்ற அடையாளங்கள் தனி வகுப்புகளில் கற்பிக்கப்படும்.

யோசனைக்கணக்கு விடை

(கொத்து 33, மலர் 6, பக்கம் 123.)

விடை :—கடிகாரம் உடைந்த விதம் :—(1) 11, 12, 1, 2 (2) 9, 10, 3, 4. (3) 8, 7, 6, 5 : ஒவ்வொன்றின் கூட்டு தொகை 26.

ஷ விடையளித்தவர்கள் :—1. A. Raju, H. M. Lab. Sch. Neikuppai. 2. S. Arpudasamy, Sempet. 3. A. Daniel Swamikkannu, Asst. T. E. L. C. Boys' School, 4. G. R. Lawrence, Molaguparai. 5. M. Divianathan, Press boy. 6. M. Paul Sundararaj, VI Std. R. C. Model School. 7. S. A. Sebastian, Lab. School. East Kolathur. 8. R. Muthu Krishna Naidu. 9 & 10. M. N. Bojan & B. Pitchai, V Class, L. F. School, Kadanad.

பாடக் குறிப்பு

வகுப்பு VI. நோக்கம்: ஜீவசத்துக்கள் அடங்கியுள்ள உணவுப் பொருள்களும், அவற்றின் நன்மைகளும்.

உபகரணம்: வெண்ணெய், சீமைத் தக்காளிப்பழம், முட்டை, மீன் எண்ணெய் (cod-liver oil) முதலியன.

பீடிகை: நமது தினசரி உணவுகளைப்பற்றிப் பிரஸ்தாபித்து, இன்னும் எத்தகைய பொருள்கள் உணவாகக்கொள்வதால் சக்தி அதிகரிக்கும் என்பதைப்பற்றிக் கூறுவதாகச் சொல்லவும்.

விஷயம்: 1. பால் அல்லது வெண்ணெய், முட்டையின் வெள்ளைக்கரு, கோஸ் கீரை, மீன் எண்ணெய் போன்றவை—வியாதிக் கிருமிகள் தேகத்தினுட் புகாமல் தடுக்கும் சக்தியை அளிப்பன. இவற்றிற்கு A. வைட்டமின் (A. Vitamin) என்று பெயர்.

2. இயந்திரத்தில் தீட்டாமல், கையால் குற்றின அரிசி, கேழ்வரகு, கோதுமை, பருப்பு வகைகள், புது மாமிசம் போன்றவை தேக வளர்ச்சிக்கும், நரம்புகளின் உறுதிக்கும் பயன்படுவன. இவற்றிற்கு B. வைட்டமின் என்று பெயர்.

3. ஆரஞ்சு, எலுமிச்சை, சீமைத் தக்காளி, திராட்சை போன்ற பழவகைகள் இரத்தத்தின் சுத்திகரிப்புக்கு அவசியமானவை. இவற்றிற்கு C வைட்டமின் என்று பெயர். இதன் குறைவினால்தான், சொறி சிறங்கு, கரப்பான் படை, தேமல் முதலிய சர்ம வியாதிகள் ஏற்படுகின்றன.

4. புது காய்கறிகள், பச்சைக்கீரை வகைகள், பால் முதலியவற்றில் D வைட்டமின் என்ற சக்தியுள்ளது. சூரிய வெளிச்சத்தின் பயனாய் விளைந்துள்ளன. தேக சௌக்கியத்திற்கு இவை தேவை.

முறை: உபகரணங்களைக்கொண்டும், போதனைக் கேள்விகளின் மூலமாயும் ஷெ விஷயத்தை விளக்கவும்.

அப்பியாசக் கேள்விகள்

1. வியாதிக்கிருமிகளைத் தடுக்கவல்ல உணவுப்பொருட்கள் யாவை?
2. தேக வளர்ச்சிக்கு அவசியமான பொருட்கள் கூறுக.
3. நரம்புகளின் உறுதிப்பாட்டுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் யாவை?
4. பழங்களை ஏன் நம் உணவுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும்?
5. ஏன் கீரைகளும் காய்களும் புதியனவாய் இருத்தல்வேண்டும்?
6. பால் ஏன் ஒரு நல்ல உணவு?
7. சிறுவர்க்கும், பலஹீனமுள்ளவர்க்கும் சக்தியளிக்கும் பொருட்கள் இரண்டு கூறவும்.
8. மீன் எண்ணெய், முட்டை இவை ஒவ்வொன்றின் நன்மைகளைக் கூறவும்.

குறிப்பு:—விஷயச் சுருக்கம் க. ப.-வில் எழுதிக் காட்டவும்.

சிறு கதை

சிங்கத்தின் பிறந்த நாள் கொண்டாட்டம்

(Gabrielpuram, R. Arulanandam)

மிருகேந்திரனான சிங்கத்தின் பிறந்த நாளைக் கொண்டாட காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டம் கூடின. அக் கூட்டத்தாருக்கு நரி விரோதியாய் இருந்ததினால் அதைக் கூட்டத்திற்கு அழைக்கவில்லை.

நரிக்கு அளவு மிகுந்த கோபம் உண்டாகி அவைகளை ஒரு கை பார்த்துவிடுவதெனத் தீர்மானஞ் செய்துகொண்டு சிங்கத்தினிடம் சென்று வெகு மரியாதையாக நின்றது. சிங்கம் நரியைப்பார்த்து: "என்ன சமாச்சாரமாக வந்தாய்" என்று கேட்டது. அதற்கு நரி: "மிருகராஜனே! நாளை நடக்கப்போகும் தங்கள் பிறந்த தின வைபவத்தில் ஆடல் பாடல்களால் தங்களை மயக்கி சமயம்பார்த்துத் தங்களைக் கொன்றுபோடுவதென அந்த ராஜத்துரோகிகள் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். இதை நான் மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்து தங்களுக்குத் தெரியப்படுத்தவே ஓடிவந்தேன்" என்றது.

சிங்கம்: "இதற்கு நாம் என்ன செய்வது?" என்று நரியை யோசனை கேட்டது. நரி: "மிருகேந்திரா! அடியேன் வைபவம் நடக்கும் சமயத்தில் மறைவிலிருந்துகொண்டு தங்களைக் கொல்ல வரும்போது மெதுவாக ஊளையிடுகிறேன். உடனே தாங்கள் தங்கள் அருகில் வருபவர்களைப் பாய்ந்து கொன்றுவிடும்" என்றது. சிங்கம் நரியைப் பார்த்து: "அப்படியே செய்கிறேன்" என்று ஒப்புக்கொண்டது.

மறுநாள் குறித்த நேரத்தில் காட்டில் உள்ள மிருகங்களும் பறவைகளும் நிறைந்த சபையில் சிங்கம் அக்கிராசனபதியாக அழகாய் ஜோடிக்கப்பட்டிருந்த ஆசனத்தில் வந்து அமர்ந்தது. உடனே எல்லாம் கை தட்டின.

முதலில் கிளி நீண்ட வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து முடித்தது. பிறகு இரண்டு மயில்களால் பரதநாட்டியம் வெகு விமரிசையாகக் குயிலின் சங்கீதத்துடன் இனிது முடிந்தது. உடனே சபையோர் பலத்த கரகோஷஞ்செய்து கைகொட்டினர். பின்னர் கரடிக்கும் மனித குரங்கிற்கும் தமாஷாக குஸ்திப் பந்தயம் சுமார் ஒரு மணி நேரம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

பின்னர் யானை சபையின் நடுவில் வந்து மிருகேந்திரனின் வீரதீரச் செயல்களையும், தங்களை ஆண்டு நடத்திவரும் அன்பையும், மிருகங்கள்மீது கொண்டுள்ள பக்ஷத்தையும்பற்றி வெகு விரிவாக ஒரு லெக்ச்சர் கொடுத்தது. லெக்ச்சர் முடிந்ததும் சர்வாதிகாரியான புலி மாலையையும், காரியதரிசியான கரடி பூச்செண்டையும் எடுத்துக் கொண்டு மாலை சூட சிங்கத்தின் அருகில் சென்றன. இவற்றை எல்லாம் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த நரி இதுதான் தக்க

சமயமென்று மெதுவாக ஊளையிடத் தொடங்கியது. உடனே சிங்கம் அவை யிரண்டின்மீதும் பாய்ந்து கொன்றது. இதைப் பார்த்த மற்ற மிருகங்கள் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று ஓட்டம் பிடித்தன.

மிருகராஜாவான சிங்கம் நரி தனக்குச் செய்த உபகாரத்திற்காக அதைத் தனது பிரதம மந்திரியாக ஏற்றுக்கொண்டது.

யோசனைக்கணக்கு

(S. Arpudasamy.)

இரண்டு சிநேகிதர் மாம்பழம் வாங்குவதற்காக, ஒருவர் 12 அணவும், மற்றவர் 4½ அணவும் கொண்டு சென்றனர். கடைக்காரன் அவர்களது மொத்தப்பணம் ரூ. 1-0-6-க்கும் 55 பழங்கள் கொடுத்து, அவரவர் பணத்துக்குத் தக்கபடி பழங்களைப் பங்குபோட்டு எடுத்துக் கொள்ளும்படி அனுப்பிவிட்டான். அப்படியானால் அவர்கள் ஒவ்வொருவரும் பிரித்துக்கொண்ட பழங்கள் எத்தனை?

விகடம்

(கடையிலுள்ள இருவர் சண்டைபோட்டுக்கொண்டு முதலாளியிடம் சென்று.........)

சுந்தரம்: ஐயா! நான் கோவிந்தனை ஒரு அடி அடித்தேன். அவன் என்னை நாலு அடி அடித்துவிட்டான்.

முதலாளி: ஏண்டா, கோவிந்தா, சுந்தரத்தை நாலு அடி அடித்தாய்?

கோவிந்தன்: என்னை அவன் ஒருவீசைக் கல்லால் ஒரு அடி அடித்தான். நான் அவனைக் கால் வீசைப் படிக்கல்லால் நாலு அடி அடித்தேன்!

L. Antonisamy.

திருடன்: (பள்ளிக்குப் போகும் பையனை வழிமறித்து) டேய், கையில் இருக்கிறதை குடுக்குறயா? மூளையைச் சிதற அடித்து விடட்டுமா?

பையன்: அதெல்லாம் முடியாதப்பா! எங்க வாத்தியார் எனக்கு மூளையே இல்லே என்று சொல்லியிருக்கிறார்!

P. கோபாலன் VII Standard.

இயற்கை அறிவு

(U. A. Das Udayar)

1. பாம்புகளால் பயன்

வேளாளர்கட்கு புழுக்கள் மிக்க உதவிபுரிகின்றன என்று அறிஞர் கூறுகின்றனர். அவ்விதமே பாம்புகளும் குடியானவர்கட்கு மிகவும் பயன்படுகின்றனவாம். இது ஓர் ஆச்சரியமாய் நமக்குத் தோன்றலாம். ஆனல் இச்சமயம் நாம் "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்ற பழம் தமிழ்ப் புலவர் பெருமானின் கூற்றை நோக்கின் பாம்புகள் விவசாயிகட்கு உதவிபுரியவேண்டியதும் கடவுள் நியமனமே என்று எண்ணுவோம். இவ்வெண்ணம் கீழ்க்கண்ட உண்மையை அறிவோமாயின் ஊர்ஜிதமாகும். ஓர் ஆண்டில் குடியானவன் ஒருவனுக்கு 10 ஷில்லிங்கிலிருந்து 10 பவுன் வரை ஓர் எலியால் நஷ்டம் ஏற்படுகின்றது. இவ்வளவு கெடுதல் விளைவிக்கும் எலிகளை வருஷத்திற்கு ஏறக்குறைய 200 வரை ஓர் பாம்பு தின்றுவிடுகின்றது. ஆதலால் ஓர் பாம்பினல் ஓர் விவசாயி வருஷத்தில் குறைந்தது 100 பவுன் இலாபம் அடைகின்ருன் என்ருல் மிகைப்படக்கூறியதன்ரே? இதனல்தான் பாம்புகள் குடியானவனுக்கு உதவிபுரிகின்றன என்று கூறுகின்றனர். இப்பொழுதாவது நம் பழம் புலவரின் கூற்று உண்மையாவது புரிகின்றதா?

2. சிங்கத்தைப்பற்றிய சில நசிகரச் செய்திகள்

1. சிங்கத்தின் வால் நுனியில் ஓர் ஆச்சரியமான நகம் உண்டு. 2. பூனை இனத்தைப்போல் சிங்கத்திற்கு மரம் ஏறத் தெரியாது. 3. தக்க பருவம் அடையும்வரை கர்ஜிக்காது. 4. சிங்கக்குட்டிகளின் தேகத்தில் 6 மாதங்கள்வரை புள்ளிகளுண்டு.

3. ஒரு காலன் எண்ணெய்

முற்காலங்களில் கப்பல் உடைந்தால் அதினின்று தப்புவோரின் பாதங்களும், கால்களும் சீதோஷ்ணத்தால் பாதிக்கப்பட்டிருந்தன. ஆனல் ஓர் சமயம் ஓர் எண்ணெய்க் கப்பல் உடைந்தகாலை அதினின்றும் தப்பினவர்கட்கு பாதங்கள் சீதோஷ்ணத்தால் பாதிக்கப்படவில்லை. இதன் காரணம் அவர்கள் எண்ணெய் கலந்த தண்ணீருள்ள கப்பற்றளங்களில் நடந்ததாலென்று கண்டுபிடிக்கப்பட்டது. அக்காலத்தினின்று ஒவ்வொரு படகிலும் ஒரு காலன் எண்ணெய் வைக்கப்படவேண்டுமென்பது கப்பல் சட்டத்தில் ஒன்று.

" ஆசைக் கிளி "

(By S. Gopalakrishnan)

காட்சி 1.

189983

மைசூர் திவான் சாந்தே ராவ் பங்களா. பிற்பகல்

சாந்தே ராவ் (சாய்வு நாற்காலியில் இருமிக்கொண்டே): டபேதார்! டபேதார், தாகம் அதிகரிக்கிறது. சிறிது ஷர்பத் கொண்டுவா.

டபேதார்: எஜமான்! அப்படியே ஆகட்டுங்க. (தயங்கல்)

சாந்தே ராவ்: அரண்மனையிலிருந்து பழங்கள் வந்ததா?

டபேதார்: வந்ததுங்க. இராணியார் இவ்விஷயத்தில் கருத்தாய் இருக்கிறாங்க.

சாந்தே: சரி நீ போய், இரண்டு பழங்கள் சாறு பிழிந்து கொண்டுவா. (டபேதார் போதல்).

சாந்தே: ஐயோ! இந்த பாழும் இருமல் என்று தொலையும் (இருமுதல்) ராணி சத்தியவதி என்னருமைக்குமாரியின் பொருட்டுத் தான் நான் உயிர்தரிக்கிறேன். இப்பதவி எனக்கு எதற்கு? என்னால் ஒன்றும் வேலைசெய்ய முடியவில்லை. எனக்குப்பின் அவள் கதி யாதாகுமோ! அரசனுக்கு அவள்மீது அன்பு இல்லையாம். வேறு மங்கையை மணக்க எண்ணினாலும் எண்ணுவார். அப்படியாயின் என் மகள் என் அருமை புதல்வி கதி என்ன? அரசியாயிருந்தும் ஒரு சுகமும் இல்லை! அரசன் மதுவை மாந்திக் குடித்து கூத்தில் களித்து குளிக்கிறான்! அந்தோ என்ன மதியீனம் மதுவும் மங்கையும் எத்தனை மன்னர்களைக் கொன்றது!

(ஹைதர் வெளியே நிற்றல்)

ஹைதர் (உடை சரிபடுத்திக்கொண்டு): அப்பாடா! தலை தப்பியது தம்பிரான் புண்ணியம். அப்பாதகர்கள் என்னை விரட்டி விரட்டி பிடிக்கப்பார்த்தார்கள். அகழியில் விழுந்து நீந்தி கண்ணுக் கெட்டாத தூரத்தில் கரையேறியதால் பிழைத்தேன். ஐயோ! என் மனைவி மக்கள் இரகசிய வழியாகச் சென்றார்களே! அவர்கள் கதியென்ன! ஆ! அல்லா! நீர்தான் துணை. (மண்டியிட்டு பணிதல்) (கோபத்துடன்) அடே கண்டேராவ்! இது உன் சூழ்ச்சி! பேடி!! வீரனானால், நேருக்கு நேர் நின்று போர் செய் பார்ப்போம். நயவஞ்சகா!!... உன் சூது என்னிடம் பலிக்காது. வஞ்சத்திலும் உன்னை மிஞ்சுவேன் என்பதைக் காட்டுகிறேன்! ஹைதர் அலி எலியல்ல... புலி...என்று நினை. (உலாவுதல்) இதோ திவான் சாகிபு பங்களா. அவரைக் கண்டு.........இருக்கட்டும். அரசனோ மதுவைக்குடித்தும் மங்கையை நாடி மதியிழந்தான். திவானோ நோயாளி, மக்களோ வெறுப்புற்றிருக்கிறார்கள். தடியெடுத்தவன் தண்டக்காரன் என்று இந்தக்காலத்தில் இருக்கிறது. எதற்கும் திவானைத்தான் பார்ப்போம். (பங்களாவை நெருங்குதல்.)

டபேதார் : யாரது அங்கே? யாரையா நீ? எங்கே வந்தாய்?

ஹைதர் : நான்தான் குதிரைப் படைத்தலைவன், இவனைப் பார்க்கவேண்டும்.

டபேதார் : ஆ! ஹா! குதிரைக்காரஞ? உன் பெயர் என்ன? (வெறுப்புடன் நோக்கல்)

ஹைதர் : என் பெயர் ஹைதர் அலி.

டபேதார் (தனக்குள்) : ஆளுக்கு ஏற்ற பெயர்தான். (வெளியே) ஸ்வரூபம்தான் பயமாயிருக்கு என்னு பேரும் வாய்க்குள் நுழைய மாட்டேன்கிறதே! ஏ!

ஹைதர் : அப்படியா? (ஒரு குட்டு குட்டுதல்) இப்போ (டபேதார் வாய்விட்டு அலறல்) வாய் இவ்வளவு பெரிசாயிருக்கு, ஏன் நுழையவில்லை? இப்போ சொல்லிப்பார், நுழையும்.

(சந்தடிகேட்டு சாந்தாராவ் "டபேதார் டபேதார்" என கூப்பிடுதல்—டபேதார் போதல்.)

சாந்தே : யார் வெளியே? யாருடன் பேசிஞய்?

டபேதார் (சமாளித்துக்கொண்டு) : யாரோ, தையர் அலியாம் தங்களைப் பார்க்க வந்திருக்காரு.

சாந்தே : அது யார் தையர் அலி? (யோசித்து) ஹைதர் அலி என்று சொல்லு. (சிரித்தல்) இருமுதல்.

டபேதார் : ஆமாங்க அவர்தாங்க.

சாந்தே : வரச்சொல், போ. (ஹைதர் நுழைதல்).

ஹைதர் : (பணிவுடன்) சலாம். எஜமான்! சலாம்.

சாந்தே : ஹைதர்! உன்னைப் பார்த்து நெடுநாளாயிற்று. சந்தோஷம். சௌக்கியமாயிருக்கிருயா?

ஹைதர் : பிரபோ! தாங்கள் நட்ட பயிர் மழையில்லாமல் வாடுகிறது.

சாந்தே : என்னப்பா! உனக்குற்ற துயர் யாது?

ஹைதர் : பிரபு! நீங்கள் நோய்வாய்ப்பட்டதிலிருந்து அரண்மனையில் ஒரு பெரும் குழப்பம்தான். கண்டேராவ் வைத்தது சட்டம். அரசனை மதுவிலும் மையலிலும் மயக்கி தனது வசம் கொண்டுவிட்டார். என்ன அநியாயம்! என்மீது ராஜதுவேஷ குற்றம் சாட்டி சிறை பிடிக்க ஏற்பாடாயிருக்கிறது. தங்களைப் பார்க்க முடிந்ததே பெரும் பிரயத்தனமாகிவிட்டது.

சாந்தே : கண்டேராவ்! பாதகா! இந்த இழிதொழில் உனக்கு அடுக்குமா? (கோபத்துடன்) ஹைதர் நீ ஏன் இதை எனக்கு முன்பே தெரிவிக்கவில்லை?

ஹைதர் : பிரபு! மன்னிக்கவேண்டும். அடியேனை சூழ்ச்சி செய்து செஞ்சிக்கு வேறுபணியாக அனுப்பிவிட்டார்கள். இன்று காலை என் கோட்டை யடைந்ததும் என்னைத் துரத்தி என் மக்களையும் துன்புறுத்தவே தப்பியோடி தங்களைக் காணப்பெற்றேன்.

ராஜதுவேஷ குற்றம் என் தலைமீது சுமந்து தங்களைக் காணும் ஓர் ஆசையால் இங்கு வந்தேன். இந்த ஏழை தங்கள் அடிமை என்பதை தேவரீர் அறியாததோ?

சாந்தே: உன்னை நோவதில் என்ன பயன்......அரசிக்கு இது ஒன்றும் தெரியாதா? ஏன் செய்தி யனுப்பவில்லை? ஐயோ! என் புதல்வி என் அருமைக் குமாரி! தலையில் பேரிடியன்றோ விழப்போகிறது. இதற்கு ஏதேனும் உபாயம் தேடவேண்டுமே! ஆ! வயோதிககாலத்தில் இந்நோயுற்ற வேளையில் ஈசா இதென்ன சோதனை! (சோர்ந்து சாய்தல்.)

ஹைதர்: எஜமான்! கவலைவேண்டாம். ஆபத்துகாலத்தில் அதைரியமும் நோயுற்ற காலத்தில் கவலையும் தீமையே விளைவிக்கும். அல்லா யாவற்றையும் பார்த்துக்கொள்வார்.

சாந்தே: ஹைதர்! ஹைதர் இதற்கு ஒரு உபாயம் கூறு.

ஹைதர்: பிரபுவே! இவ்வேழைக்கு என்ன தெரியும். கல்வியுமில்லை, உலக அநுபவமும் அதிகம் இல்லை. தங்களுக்குப் பணிசெய்யும் ஓர் ஆசையினால் எனக்கு இந்த யோசனை தோன்றுகிறது. முதலில் அரசிக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஏனென்றால் அரசியைச் சுற்றிலும் தோழிகளே கண்டேராவுக்கு அநுகூலமாக வேலைசெய்துவருகிறார்கள். புலிக்குழாத்தின் நடுவே புல்வாய் என அரசியார் புழுங்குகிறார்கள். அவ்வரக்கிகளை ஒழிக்கவேண்டும். இரண்டாவதாக அரண்மனை உத்தியோகஸ்தர்களிலும் படைகளிலும் விரோதிகள் வேலை செய்துவருகிறார்கள்.

சாந்தே: ஆம். ஆம். ஹைதர். நீ சொல்வது சரியே, அரசிமீது அபாண்டமாகப் பழி சுமத்தி மன்னருக்கு மறுவிவாகம் நடத்த கண்டேராவ் வழி தேடினாலும் தேடலாம். அரசிக்கு எவ்விதம் பாதுகாப்பு அளிக்கலாம்?

ஹைதர் (யோசித்து): ஏன் நமது அரசியிடம் போதிய அதிகாரம் கொடுத்துவைத்தால்......

சாந்தே: ஆம் ஆம். (பெட்டியைத் திறந்து) இதோ ஹைதர்! இந்த ராஜமுத்திரையை அரசியிடம் எவ்வகையிலாவது சேர்ப்பிப்பது உன்னுடைய வேலை. அரசிக்கு தற்போதைய நிலையை நன்குணர்த்தி எச்சரிக்கையாயிருக்கச் சொல். தனக்கு விரோதிகளாயுள்ளவர்களைச் சிறிதும் தாக்ஷண்யமின்றி ஒழிக்கச் சொல். இவ்விஷயத்தை நீ ஒருவரிடமும் வெளிவிடாதே. அரசியிடம் தனியே கொடு! மீண்டும் என்னிடம் வா! உன்னையே எதிர்பார்த்திருப்பேன் ஜல்தி! ஜல்தி!! (ஹைதர் பணிந்து, வெளிவருதல்).

ஹைதர் (தனக்குள்): தேடிப்போன மூலிகை காலைச் சுற்றிற்றும்! அதிர்ஷ்டம் என்பதே ஒரு அலாதியான விஷயம்! அப்பப்பா எத்தனை கஷ்டங்கள் அநுபவித்தேன்! எத்தனை தடவை வேலையிழந்தேன்! எத்தனை இடையூறுகள்! அத்தனையும் இன்றோடு கட்டோடு

போயிற்று. (சிரித்தல்). பாவம் பெற்ற மனம் பித்து அல்லவா!... இதோ (முத்திரை காட்டி) இந்த ராஜமுத்திரை என்னிடம் இருக்கிறது...ஹா! ஹா!! ஹா!!! என் உத்தரவு ராஜா உத்தரவுதான்... நான்தான் ராஜா. இல்லை, இல்லை. திவான் ஆம் ஆம் திவான் (கோபத்தோடு) கண்டேராவ்! உன்னை அப்படியே பிழிந்து சாறு எடுக்கிறேன் பார்! இனி ஹைதரை நன்ருய் புரிந்துகொள்வாய். (யோசித்து) சரி சரி இப்படிச் செய்தால் என்ன? இன்றே காவிரிப் பட்டணம், துவார சமுத்திரம், ஸ்ரீரங்கப்பட்டணம் முதலிய இடங்களிலுள்ள சேனைத் தலைவர்களுக்கு இம்முத்திரையிட்ட ஓலை போக்கிப் படையுடன் வருமாறுசெய்து அப்படைகொண்டு கண்டேராவைத் தாக்கி சிறைபிடிக்கிறேன். வீரமுள்ளவனையே வெற்றி தேவதை சாருவாள். அவ்வீரன் (மார்தட்டி) இந்த ஹைதர் இதற்கும் சந்தேகமா? இனி இராஜமுத்திரை என்னிடம் விட்டு நீங்குவது ஏது! எனக்குக் கெடுதல் வருவதேது? எல்லாம் அல்லாவின் செயல். அல்லாஹூ அக்பர்! (பணிதல்.)

காட்சி 2

தர்பார் ஹால். மைசூர் அரசர் புடைசூழ வீற்றிருத்தல்.

மைசூர் அரசர்: பேஷ்கார்! நமது திவானின் தேகநிலை எவ்வாறு உளது?

பேஷ்கார்: அரசே! நமது திவான் சாகிபு சாந்தோராவின் தேகநிலை ஒரேதன்மையில் இருக்கிறது. கூடியசீக்கிரம் அவர் சுகமுற்று நம் அவைக்களத்தை அலங்கரிப்பாரென நமது வைத்ய பூபதிகூறுகிருர். அப்பெருநாள் சீக்கிரம் கிட்டுமென இறைவனை இறைஞ்சுகிறேம்.

அரசர்: நம் உள் நாட்டுக் கலகம் எவ்வாறு முடிந்தது?

பேஷ்கார்: அரசே! ஹைதர் சேனைகள் கண்டேராவின் சேனையை முறியடித்து கண்டேராவையும் சிறைபிடித்தன. இவ்விரு தலைவர்களையும் தீர விசாரித்து நீதியளிக்கவே இன்று சபை கூட்டப்பட்டுள்ளது.

அரசர்: ஹைதர் என்பவர் யார்? ஏன் கண்டேராவுடன் சண்டையிடவேண்டும்? கண்டேராவ் சிறந்த தளபதியாயிற்றே!

பேஷ்கார்: ஹைதர் என்பவர் குதிரைப்படைத்தலைவர். திண்டுக்கல் போரில் அஞ்சா நெஞ்சுடன் கோட்டையைத் தாக்கி எதிரிகளைக் கலக்கி நமக்கு பெரும் வெற்றியளித்தவர். அவ்வெற்றியின் பேரொலியே இன்று நம் விரோதிகளை கிலியடிக்கச் செய்திருக்கிறது. அந்த ஹைதரை சமீபத்திற்ருன் ஒரு படைக்குத் தலைவராக்கினேம். அன்னாரை கண்டேராவ் ராஜதுவேஷம் குற்றம்சாட்டி சிறைபிடிக்க முயன்ருர். அவரது மனைவியையும் மக்களையும் விரட்டினுர். இது பொருத ஹைதர் திவானின் அநுமதிபெற்று கண்டேராவ்மீது படையெடுத்து சிறைபிடித்துள்ளார். மேலும் கண்டேராவ் சேனைக்கென பணம்பெற்று தூர்விநியோகம் செய்கிருர். மராட்

டியருடன் கள்ள நட்புகொண்டு இருப்பதாகவும் கேள்விப்படுகிறேம். இதையல்லாமல் மனதில் கொண்டே, திவான் அவர்கள் படையெடுக்க அநுமதித்தார், என தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(சேவகன் ஹைதர் கண்டேராவை விலங்கிட்டு கொண்டுவருவதாக அறிவித்தல்.) ஹைதர் வணங்கி தன் இருக்கையில் நிற்றல் கண்டேராவ் (விலங்குடன்) வணங்கி தலை குனிந்து நிற்றல்.)

பேஷ்கார்: அரசே! கண்டேராவ் செய்த குற்றங்களாவன:— 1. சகோதர அதிகாரியைத் தாக்கியது. 2. கஜானுவை துர்விநியோகம் செய்தது. 3. அரண்மனை விஷயங்களில் தகாத இடங்களில் பிரவேசித்தது. 4. அந்நியருடன் நட்புகொண்டது. இதற்குத் தண்டனை சிறைவாசத்தைத் தவிர வேறில்லை. தேவரீர் அநுமதி கோறுகிறேம்.

அரசர்: கண்டேராவ்! இக்குற்றங்களுக்கு உமது சமாதானம் என்ன?

கண்டேராவ்: அரசே! மேற்சொன்ன காரியங்கள் அனைத்தும் நான் செய்தவைகளே! ஆனல் குற்றங்கள் அல்ல. என் சுயநலம் கொண்டு செய்தவையல்ல. தங்கள் மீது அன்பு செலுத்துவதில் நிகழ்ந்தவை என்பது தங்கட்கு தெரியாததல்ல. ஆதலால் மன்னிக்க வேண்டும்.

அரசர் (பரிகாசச் சிரிப்புடன்): கண்டேராவ்! நன்று! நன்று! நீர் செலுத்தும் அன்பு! அதைவிட நீர்கோரும் மன்னிப்பு வெகு நன்ருயிருக்கிறது. நம்மைப் பொறுத்த வரையில் ஏற்பட்ட குற்றங்களை நாம் மன்னித்துவிட்டோம். ஆனல் ஹைதருக்கு இழைத்த தீங்குகளுக்கு அவர்தான் மன்னிப்பு அளிக்கவேண்டும்.

ஹைதர் (எழுந்து வணங்கித் தனக்குள், என்ன இருந்தாலும் தன் நண்பனை அரசர் காட்டிகொடுப்பாரா இதற்கெல்லாம் இந்த ஹைதரா ஏமாறுபவன்): (வெளியே) அரசபெரும! தங்கள் மன்னிப்புடன் இவ்வேழைப் பிரஜையின் மன்னிப்பும் சேர்ந்துவிட்டது. ஆனல் திவான் அவர்கள் இதோ இவ்வோலையைக் கொடுத்துளார். (ஒரு கடிதம் பேஷ்காரரிடம் அளித்தல்.)

(பேஷ்கார்: அக்கடிதம் வாங்கி அரசரிடம் சமர்ப்பித்தல்.)

அரசன் (கடிதம் நோக்கி தனக்குள்): அந்தோ! என் முத்திரையல்லவா பதிக்கப்பெற்றிருக்கிறது! இனி என் வாக்கை நான் மீற முடியாது! தண்டனை தீர்த்தேயாகவேண்டும். வெளியே நமக்குச் செய்த குற்றமும் ஹைதருக்கிழைத்த தீங்கும் மன்னிக்கப்பட்டது. நாட்டிற்கிழைத்த குற்றத்துக்கே தண்டித்தேயாகவேண்டும். சேவகா! உருளைகளால் நகர்த்தி இழுக்கக்கூடிய பெரிய கூண்டில் கண்டேராவை அடைத்துப் பூட்டிவை. அதுவே சிறைவாசம். குற்றவாளியேயானுலும் கண்டேராவ் நமது "ஆசைக்கிளி" யல்லவா? (அரசன் எழுதல்.)

(திரை விழுகிறது.)

உடை

ஒருவனுக்கு உண்ண உணவும், இருக்க வீடும் அவசியமாயிருப்பதுபோல, சமூக வாழ்க்கைக்கு உடை மிகவும் அவசியமாகும். "உண்ணுமல் ஊரெல்லாம் திரியலாம்; உடுத்தாமல் அடுத்த வீடு போகலாகாது." ஆதலின், தரித்திரவானுயிருந்தாலும், தனவானுயிருந்தாலும், உடை மிகவும் தேவையானது.

அவ்வத் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு, உடை அணிந்துகொள்வது உசிதமாகும். குளிர்நாடுகளில், தேகத்திற்கு வெப்பத்தைக் கொடுக்கக்கூடிய கம்பளி முதலிய முரட்டு ஆடைகளை அணிந்துகொள்ளுகிருர்கள். உஷ்ணம் மிகுந்த நமது நாட்டவர்களுக்கு, மெல்லிய பருத்தி ஆடைகளே ஏற்றவை. தையல் வேலையில்லாத பண்டை காலத்தில், அங்கி முதலிய நீண்ட வஸ்திரங்களை உடுத்திவந்தனர். ஆனல், நாகரீகம் ததும்பும் இக்காலத்திலோ, தையல் வேலையின் மிகுதியால், பலவிதமான மேல்நாட்டு உடுப்பு வகைகள் உபயோகத்துக்கு வந்துவிட்டன. உடைகளின் சிக்கனத்தையும், சுத்தத்தையும் அனுசரிக்கவேண்டும். அந்தஸ்துக்குத் தகுந்த உடைகளை உடுத்துவதே முறை. மிதமிஞ்சி உடுத்துவது டாம்பீகம்.

கண்ணுக்குப் பகட்டான பலவர்ணமுள்ள ஆடைகளையே சிலர் விரும்புவர். அவர்கள் சொல்வதென்ன? "வெள்ளைத்துணியெல்லாம் அழுக்குத் தாங்காது, சிவப்பு முதலிய வர்ணத்திலேயே எடு" என்பர். இவ்வித உடைகளை அணிவதினல் அழுக்குப் படிந்தாலும் தெரியாது, அவர்களுக்கும் ஆனந்தம். இந்தத் துணிக்குக் கொடுத்த காசு செரிக்கும் என்று சொல்வார்கள். ஆனல், இதனல் அவர்களுக்குப் பல வியாதிகள் வரக்கூடுமென்பதை அவ்வறிவிலிகள் அறியார். சுகாதார விதிப்படி, அழுக்குப் படிந்தவுடன் தெளிவாய்த் தெரியக்கூடிய வஸ்திரத்தை அணிவதே உசிதம். அவ்வாறு தெரிவது, நாம் அழுக்கை போக்கிக் கொள்ள ஏதுவாயிருக்கிறது. ஆதலால் சீதோஷ்ணத்துக்கும், சுகாதாரத்துக்கும் ஒத்தவண்ணம், வெண்மையான பருத்திப் பஞ்சாடையே மேலானது.

ஒருவர் உடுத்தியிருந்த உடையை மற்றவர்கள் உடுத்துவதினல், ஒருவருக்குள்ள வியாதி மற்றவர்களுக்கு ஒட்டிக்கொள்ளும். விசேஷமாய் சொரி, சிரங்கு முதலியன. "இளைமாயகப் பட்ட மாட்டை நிலாவில் கட்டி அடிப்பதுபோல்"; வெளுக்கக்

கொண்டுசெல்லும் வண்ணன், தான் உடுத்திக்கொள்வதினுலோ, அல்லது பிறரிடம் வாடகைக்கு விடுவதினுலோ, அந்த வஸ்திரமானது, "வாதங் கிழித்தது பாதி, வண்ணுன் கிழித்தது பாதி" என சீக்கிரத்தில் பயனற்றதாகிவிடுகிறது. உடைகளை நாமே சுத்தம் செய்துகொள்வது மிகவும் நல்லது. சவர்க்காரம் (Soap) போட்டு அழுக்கைப் போக்கிக்கொள்ளலாம். இவ்வழக்கம் ஐரோப்பியரிடமிருந்து வருகிறது. அவர்கள் வாரத்தின் சனிக் கிழமையன்று, (Washing day) தங்கள் வஸ்திரங்களைத் தாங்களே கசக்கிப் புட்டிப் போட்டுக்கொள்ளுகிருர்கள். இவ்வழக்கத்தை நாமும் மேற்கொள்ள பிரயாசப்படவேண்டும்.

பள்ளிச் சிறுவர் தினமும் ஸ்நானம் செய்து, வஸ்திரங்களைக் கசக்கிக் கட்டும்படியும், புழுதியடைந்த தரையில் உட்காராமலும், விளையாட்டு நேரத்தில் அரை நிஜார்களைத் தரித்துக் கொள்ளும்படியும், அவர்களுக்குக் கற்பிப்பதுமன்றி, ஆசிரியர் தானே நடத்திக் காண்பிப்பது சிறந்ததாகும்.

விடுகவி விடை

(கொத்து 33, மலர் 6, பக்கம் 130.)

விடை :—1. பலாக்கொட்டை. 2. சூரியன். 3. வெற்றிலை.
இவ்விடையளித்தவர்கள் :—

1. T. S. S. Arokiasamy, Tolurpatty. 2. M. Doraisawmy, E. 2 A. 3. M. Ignaci, E. 1 A.

இது என்ன?

(விடுகவிகள்)

1. ஓகோ, செட்டியாரே! உயர்ந்த ரெட்டியாரே! உன் தலைமேல் தொண்ணூறு முடிப்புகள்! A. சவரிமுத்துபிள்ளை, திருப்பயர்.

2. வெள்ளை நிலத்தில் கறுப்பு விதையை கையால் விதைத்து, வாயால் பொறுக்கவேண்டும். Miss S. Dhanapackiam.

3. ஓடும் இருக்கும், அதன் உள் வாய் வெளுத்திருக்கும். நாடும்குலை தனக்கு நாணுது. S. N. Dharmalingam.

மழை வருகையைக் குறிக்கும் அடையாளங்கள்

(M. Ignacimuthu)

நம் நாட்டில் உழவர் முதல் பலரும் மழை வருவதைச் சில அடையாளங்களைக்கொண்டு ஊகித்துக் கூறுவதுண்டு. இதற்கேற்பப் பின் வரும் "உழவர் பாட்டு" கவனிக்கப்பாலது :—

ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி!
மலையாளம் மின்னலுமே சூழ மின்னுதே!
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றி காற்றடிக்குதே!
கேணி நீர்ப்படும் சொரித்தவளை கூப்பிடுகுதே!
சேற்றை நண்டு உறச்சேற்றைக் கில்லி ஏற்றடைக்குதே!
தேடி யொருகோடி "வானம்பாடி" யாடுதே!

இதுபோன்ற உழவர் பாடல்கள் பலவுள. ஆனால் இயற்கையின் கால நிலைகளைச் சில பிராணிகளும் தெரிவிக்கின்றன. அவற்றுள் சிலவற்றைத் தெரிவிப்போம். நாயும் பூனையும் புல்லைக் கடித்தால் உடனே மழை வருமாம். மற்றெல்லாவற்றிலும் நத்தை, மழை வருவதைத் தெரிவிப்பதில் சிறப்புடையது. சுவற்றின் மேலும், செடிகளின் மேலும் ஏறிக்கொண்டு தலையை நீட்டிக்கொண்டிருக்குமாம். உடனே மழை பெய்யும்போது சுகமாக அதை அனுபவிக்குமாம். "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழை பெய்யும்" என்ற பழமொழி வழங்கி வருகிறதல்லவா!

மழை வருவதைத் தவளை தவறாமல் காட்டும். மழை வருமுன் தவளை ஓயாமல் கத்தும். அதன் தேக நிறத்திலும் மாறுபாடு காணும். தேரை தன் இருப்பிடத்தை விட்டு வெளிவந்தாலும் மழை வருமென்பர். இன்னும் கோழி மண்ணில் புரண்டாலும், ஆமைகள் குந்துகாலில் குந்திக்கொண்டு விரைவாக உணவு உண்டாலும் மழை வரத் தப்பாதாம். மேலும் பூனை நிலத்தைக் கீறினாலும், ஓணான் மரத்தின் உச்சிக்குப் போய் ஆகாயத்தை உற்று நோக்கினாலும், பசுக்கள் சூரியனை அண்ணார்ந்து பார்த்தாலும், நாய் கூரையின்மேல் நின்றாலும், பாம்பு புல்லின்மேல் படுத்தாலும் மழை வருவதின் அடையாளங்களாம்.

என்னே! மேற்கூறியபடி மழை பெய்தாலும் ஒருக்கால் பெய்யாவிடினும், பெரிதன்று. ஆனால் இப்பிராணிகள் தங்கள் தற்பாதுகாப்பின்பொருட்டு சீதோஷ்ண நிலையையறியப் பாடுபடுகிற விந்தையன்றோ சிறப்பு!

உங்களுக்குத் தெரியுமா?

(N. R. திருவேங்கடம், L. F. H. E. School, Megalathur.)

1. இந்தியாவில் விவசாயிகளின் மொத்தக் கடன் பளுவு எவ்வளவு? (900 கோடி ரூபாய்.)

2. விவசாயிகளின் கடன் பளுவு நிலத்தீர்வையைவிட எவ்வளவு மடங்கு அதிகம்? (15 மடங்கு.)

3. இந்தியாவில் சாகுபடியாகும் பூமி தலைக்குச் சராசரி எவ்வளவு சொல்லுங்கள்? (ஏறக்குறைய ஒரு ஏக்கர்.)

4. உலகத்தில் எழுதத் தெரியாதவர்களில் மூன்றில் ஒரு பங்கு எத்தேசத்தில் இருக்கிறார்கள்? (இந்தியாவில்.)

5. ஒரு கசகசாப் பழத்தில் சுமார் எத்தனை விதைகள் இருக்கும்? (சுமார் 3000 விதைகள்.)

6. ஐரோப்பாவில் மனிதர் முதன்முதல் எப்பொழுது சொக்காய் போட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள்? (8-வது நூற்றாண்டுக்குப் பிறகு.)

7. சூரியனுடைய ஒளிச்சுடர் (sun rays) களின் நீளம் எவ்வளவு? (ஏறக்குறைய 80,000 மைல்கள்.)

8. ஒரு இராத்தல் பட்டு நூல் எடுக்க சுமார் எத்தனை பூச்சிகளைக் கொல்லவேண்டும் தெரியுமா? (சுமார் 2,300 பூச்சிகள்.)

9. இக்காலத்திலும் உண்பதற்காக நத்தைகளை வளர்க்கும் தேசங்கள் எவை தெரியுமா? (இத்தாலியும், பிரான்சும்.)

10. நத்தைக்குப் பற்கள் இருக்கிறதா? எத்தனை? (பற்கள் உண்டு. சுமார் 14175 பற்கள், 135 வரிசை.)

* * *

1. "காப்டன் அமண்ட்ஸன்" நார்வே தேசத்தவர். இவர் 1911-ம் ஞு டிசம்பர்-மீ 14-ம் உ தென் துருவத்தை முதன்முதல் அடைந்தவர்.

2. "ராபர்ட் பியரி" பென்ஸெல்வேனியாவில் பிறந்தவர். இவர் 1909-ம் ஞு ஏப்ரல்-மீ 6-ம் உ முதன்முதல் வட துருவத்தை அடைந்தவர்.

3. "அலெக்ஸாண்டர் பெல்" 1847-ல் ஸ்காட்லாந்தில் பிறந்தவர். தற்காலம் பெரிதும் உபயோகமாகவிருக்கும் டெலிபோனைக் கண்டுபிடித்தவர்.

4. "தாமஸ் ஆல்வா எடிஸன்" 1847-ல் பிறந்தவர். இவர் "கிராமபோன்" முதலிய 400 உபயோகமுள்ள கருவிகளைக் கண்டு பிடித்தவர். சமீபத்தில்தான் இறந்தனர்.

5. "குக்ளிமோ மார்க்கோனி" 1874-ல் பிறந்தவர். கம்பி இல்லாத் தந்தியைக் கண்டுபிடித்தவர் இவரே.

6. "ஆல்பிரட் நோபிள்" பாறைகளைப் பிளக்கும் சக்திவாய்ந்த [illegible]யைக் கண்டுபிடித்தனர்.

R. Muthukrishna Naidu, H. M., Lab. School,
Kottamedu, Kulitalai.

189983

பெற்றோர் சங்கங்கள்

22-11-42-ல் [illegible] கிராமம் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கம் ஷை கிராமத்தில் கி. மு. ஸ்ரீ T. N. சுப்பிரமணிய அய்யரவர்களின் தலைமையின்கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றதென ஷை பாடசாலை ஆசிரியர் எழுதுகிறார்.

திரு. சவரிநாதன் S.

25-11-42-ல் உலகம்பட்டி ஆர்ச். சின்னப்பர் உயர்தர பாடசாலையின் பெற்றோர் சங்கக் கூட்டம். திண்டுக்கல் ரேஞ்சு ஜூனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர் அவர்களது தலைமையில் வெகு சிறப்பாய் நடைபெற்றதாக காரியதரிசி திரு. டேவிட் ஜெயராஜ் தானியேல் தெரிவிக்கின்றனர்.

29-11-42-ல் லா. தா. நெய்க்குப்பை லேபர் பாடசாலை பெற்றோர் சங்கமும், புதுக் கட்டிட திறப்புவிழாவும், ஷை ரேஞ்சு ஜூனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. R. பால கணபதி அவர்களின் தலைமையின்கீழ் வெகு ஆடம்பரத்துடன் நடைபெற்றதாக, காரியதரிசி திரு. A. ராஜு எழுதியுள்ளார்.

12-12-42-ல் துறையூர் ஜெமீன்தார் உயர்தர ஆரம்பப் பாடசாலை பெற்றோர் சங்கம், திரு. V. K. நாராயண அய்யங்கார் அவர்களது தலைமையின்கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றதென்றும் அவ்வமயம் திரு. S. T. ராமானுஜம் அய்யங்கார், வித்வான் திரு. நடேச முதலியார் முதலியவர்கள் இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் எனவும் ஷை பாடசாலைத் தலைமையாசிரியர் எமக்கு எழுதியுள்ளனர்.

மரநடுவிழா :— கல்லமநாயக்கன்பட்டி B. B. H. E. பாடசாலையில் ஷை விழாவன்று ஷை பாடசாலைத் தோட்டத்தில் 30 கன்றுகள் ஊன்றப்பட்டு, அது சம்பந்தமான பாடல்களும் பாடப்பட்டதென ஷை பாடசாலை ஆசிரியர் திரு. S. E. அருள்ராஜ் எழுதியுள்ளார்.

[illegible] புதுவருட வாழ்த்துப்பா

(B. Thomas Victor, Music Teacher)

29. சங்கராபரணம் (சந்த்ரோதய மீதிலே) தாளம்—ஆதி.

பல்லவி

வாழ்த்துப் புகழ் கூறுவோம்—யாவருக்கும்
மகிழ்ப்புதுவருஷ ஆனந்த (வாழ்த்து)

அநுபல்லவி

உள்ளம் குதுகலிப்பீர் நீரும் தினம்
உள்ளம் குதுகலிப்போம் யாமும் தினம்
வள்ளால் குருபரனை சொல்லால் பதம் பணிந்து (வாழ்த்து)

சரணங்கள்

1. செல்வம் நிறையருளும் பூவுலகில்
எல்லாம் குறையறவே வல்லானருள் புரிய (வாழ்த்து)
2. எங்கும் ஜெகமிதினிலே சமாதானம்
தங்கி வாழ்ந்திடவே மங்களனைப் பணிந்து (வாழ்த்து)
3. தேசம் புகழும் பதிப்பாம் பூங்கொத்தெனும்
வாசம் கமழ் மலரின் வீசும் நறுமணத்தின் (வாழ்த்து)
4. செங்கோல் செழித்துயரவே நீதிவெற்றி
மங்காதுவண்டசைய தங்க பரனைத் தாவி (வாழ்த்து)
5. ஆதிதிருவருளை மேதினியில்
ஜோதி சுடரொளியை பாடி பதம் பணிந்து (வாழ்த்து)

பல்லவி

ஸ்ந்த பகமம பா, ஞ் மபகரி	ஸகரம பதாநி	ஸ, ஸ்ரீ தாநி
வாழ்த்துப்பு கழ்கூறு வோம்யா வருக்கும்	மகிழ்பு துவரு	ஷ ஆனந்த
ஸ்ந்தபகாம கமபத ஸ்ஸரிஸ நிதபம கரிஸநி	,, ,,	,, ,,
வாழ்த்துப்பு கழ்கூறு வோ..ம் யாவருக்கும்	,, ,,	,, ,,
ஸ்ந்த பகாம கா ; ; ;		
வாழ்த்துப்பு கழ்கூறு வோம் ; , ,		

அநுபல்லவி

ஸ்ந்த பஸ்ாநி ஸ்ா, ஸா ரிஸ்நி	ஸ்ந்த பஸ்ாநி	ஸ்ா, ஸ்ாஸ்ஸ்நி
உள்ளம்கு துகலிப் பீர் நீரும் தினம்	உள்ளம்கு துகலிப்	போம் யாமும்தினம்
ஸ்ந்த் பஸ்ாநி ஸ்ா, ஸா ஸ்ஸ்நி	ஸாக்ரீஸ் நிதநிஸ்	ஸ்ந்த கமதநி
உள்ளம்கு துகலிப்போம் யாமும்தினம்	வள்ளால்குருபரனை	சொல்லால்ப தம்பணிந்து

(வாழ்த்து)

சரணம்

ஸ்ஸாநி தபகம தா, பாஸ்ஸ்நி	ஸா க்ரீஸ் ரிதநிஸ்	ஸ்ந்த கமதநி
செல்வம்நி றையருளும்பூ வுலகில்	எல்லாம்குறையறவே	வல்லான ருள்புரிய

(வாழ்த்து)

(மற்ற சரணங்களை இதே மாதிரி பாடவும்)

Reg. No. M. 1534.

OUR EMPLOYMENT BUREAU

WANTED one Secondary grade Mistress immediately on Rs. 27/- per mensem plus free quarters and T. P. F. contribution.

Apply to: **Rev. Fr. MANAGER,**
R. C. Girls' School, Kallikulam P. O.,
(*Via*) **Vallioor, TINNEVELLY Dt.**

WANTED one Secondary grade Trained Mistress in Moses Mixed School, Vijayapuram, on Rs. 25—1—35 with Provident Fund Contribution. There are already 6 Mistresses employed in this school. If unmarried, the Mistress may remain in the School Hostel.

Apply to: **Sri S. Moses Naidu, Manager,**
Moses Mixed School,
Vijayapuram, TANJORE Dt.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.